**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 3 /2019**

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.06.2026 | | |
| பெயர்: | சௌந்தரராஜன் (DW1– Cross cont) | தகப்பனார் பெயர்: | பலராமன் |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வணிகம் | வயது : | 40/2026 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 19.06.2026**

**(ஆரம்பித்த நேரம்–15.57 )**

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு எங்களுடைய பழைய வீடாகும். அதற்கு முன்பு தற்போது ஆர்.சி.சி. கடைகள் கட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தான் ஆர்.சி.சி. கடைகள் கட்டப்படும்போது எடுக்கப்பட்டது. அதற்கான புகைப்படங்கள் (எண்ணிக்கை 10) **வா.சா.ஆ.17** ஆகும். 2–வது புகைப்படத்தில் உள்ள கட்டுமானத்தில் உள்ளது எனது இடம், கிரில் கம்பியில் கலர் அடிக்கப்பட்டது, வாதியின் இடம் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் கட்டித்தில் முதல் தளம் மற்றும் 2ம் தளத்தில் ஜன்னல்கள் உள்ளது என்றால் சரிதான். 26.06.1955 தேதியிட்ட (பி.வா.சா.ஆ.6) ஒப்பந்தம் நடைமுறையில்

இல்லை என்றால் சரியல்ல. அதுபோன்ற ஒரு ஒப்பந்தம் நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தம் பற்றி வாதியின் தாயாருக்கு, யாரும் தெரிவிக்கவில்லை, எனவே அந்த ஒப்பந்தம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. வசதியுரிமையை பொறுத்து, அடுத்தடுத்து வரும் உரிமையளாருக்கும் சேரும் என்றால் சரியல்ல. வாதி புதிதாக வசதியுரிமை எதையும் கோரவில்லை, மாறாக பல்லாண்டு காலமாக அனுபவித்து வந்த வசதியுரிமையைதான் கோருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த உரிமையை மறுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வா தியின் தாயார் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாங்கும்போது, அடிமனையுடன் தரைதளமும் இருந்தது.

4.வாதி அவரது இடத்தில் அடகு கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த அடகு கடையை மறைக்கும் விதமாக நான் விளம்பர போர்டு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கட்டிடம் கட்டுவதற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அஸ்திவாரம் தோண்டும்போதுதான் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடைகள் கட்டபட்டு, அதில் 2 கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தற்போது பல லட்சம் செலவு செய்து கட்டிடம் கட்டிவிட்டேன் என்றும், அதனை இடிக்க முடியாது என்று கூறுவது சரியல்ல என்றால் சரியல்ல.

5. நான் கட்டிய கட்டித்திற்கு நகராட்சி அனுமதியும், வரைபட அனுமதியும் பெற்றுள்ளேனா என்றால் விண்ணப்பம் செய்துள்ளேன். அந்த மாதிரி வரைபடம் நகல் என்னிடம் உள்ளது, அதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா சொத்திற்கு இடைவெளி விடாமல் விதிகளுக்கு புறம்பாக நான் கட்டிடம் கட்டியுள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சொத்து வடபுற எல்லையில் எங்கு முடிகிறதோ, அங்கு வரை கட்டுமானம் உள்ளது என்றால்

சரிதான்.

6. வாதிகள் கோரியபடி வசதியுரிமை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கவை என்றால் சரியல்ல.

**(முடிவு நேரம்– 16.25)**

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**